உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance

௨ புத்தகம் சஞ்சிகை ௰௨] ௲௮௱௪௰௨ ௵ ஆனி ௰௬, தேயதி வியாழக்கிழமை. Thursday, June, 16, 1842 [Vol II No 12.

பாண்டிவளநாட்டுச் சரித்திரக்குறிப்பு

(Historical sketch of the Pandian kingdom)

Continued from page 121

பூர்வகாலந் தொடங்கி- கடைசிக காலம் வரைக்கும் பாண்டியாகளுடைய கதையைச் சொலலுகிற சாதனத்திலே முதலாவது ர சகுலமுறை (௭௨) ராசாககளெனறும, அவாகளுக்குப பினனால வநத மற்றொரு குலமுறை (௰௨) ராசாககளெனறும இவாகளிலே கடைசியானவ ா குடகுல பாண்டியனெனறும, இவனோடே பாணடிய ராசாககளுடைய பூாவீகவமச வழிமுடிநதுபோயிற்றெனறுஞ் சொலலுகிறது இந்த ராசா மதுரைககு வேலையாய வந்த ஒரு காஞ்சிபுரதது வததகனொருவனை அநியாயமாயக் கொன்றுபோடும்படியாகத் திாமானித்தானெனறொரு பேச்சுண்டு இநத வத்தகனுககு இபபடி நேரிடட விதியை இவன பெணசாதி அறிந்து மேற்படி பட்டணத்துககு வந்து அவவிடததிலே காட்டமடுககி அதிலேறிப் பட்டினத்தையும அநதப பட்டினததுஅரசனையுஞ் சபித்தாள் இச்சாபததினாலே மேறபடி மதுரையானது நெருபபுப் பற்றி மேறபடி ராசனும அவனுடைய குடுமபத்தாருந தீயிலே மாணடுபோயப பாணடிதேசதது அரசாட்சியும மாணடுபோயிற்று

இந்தச் சாதனத்திலே இருக்கிற (௰௨) ராசாக்களிற் கூன்பாண்டியன சோமசுந்தரனென்கிற தனனுடைய புதிய பேர லே முனசொலலப்பட்டிருக்கிறான. ஆகையினால அநதப (௰௨) ராசாக்களுங குறைநதது, (௰௪ம) சதகம வரைக்கும் வியாபிததிருக்க வேணடும ஆனாலும இது சரியோ அலலவோ சநதேகமாயிருககினறது. தமிழக் கலவியிலே பாணடிய ராசாவெனற பேர்தானே ஒரு பிரபலமான பேராயிருககினறது மேற்படி பாணடிய ராசாவை ஒருவேளை அரிவீரபாணடியனெனறும ஒருவேளை அதிவீரபாணடியனெனறுஞ் சொலலுகிறதுணடு மேறபடி பாணடியன சமஸகிருதத்திலேயிருந்து அநேகம புத்தகஙகளைத் தமிழில மொழிபெயாத்திருககிறானென்று கிறிஸ்தாணடு (௲௫௱௬௰௰ம்) வருடத்துக்குச் சரியான சாலிவாகன சகாத்தம (௲௪௱௮௰ம) வருடத்திலே அவன பிரபலியமாயிருந்தானென்று சொலலியிருககினறது. அவனுனன காலத்திலே இருந்தானெனகிறதை அறியப பெரிய நியாயமிலலாவிடினும ஒத்துககொள்ளத்தக்க திருட்டாந்தரங்களுமிருககினறன. அவனுடைய பேர் இவவிடத்திலே சொலலியிருககிற சாதனத்திலேயாவது இதற்குப பிறபட்ட மற்ற எநதச் சாதனங்களிலேயாவது அகபபடவலலை சோழதேசத்து ராசாக்களுக்குடபபட்டிருநத கொஙகுதேயதது ராசாககளுடைய சரித்திரததில வீரபாண்டியனெனகிறவனுககும திவவிய ராயனெனகிறவனுக்கும ஒரு சணடைநேரிட்டதாகவும அநதச சணடையிலே வீரபாணடியனெனகிறவன தோற்றுபபோய அகபபட்டுககொணடு தன காதுகள் அறுபபுணடு போனானெனறுஞ் சொலலியிருக்கின்றது அதறகடுத்த வருஷத்தில சோழராசாவினுடைய தணடு மதுரையிலே போய அந்தப பட்டினததைப பிடிததுககொணடது பாணடிய ராசாவும ஓடிபபோயத் தபபிககொணடான பிறகு அநதச் சோழராசாவுக்கும இநதப பாணடியனுக்குமிருந்த பாநதவ்யத்தைப பறறி அவனுககு மதுரை மறுபடியுங கொடுககபபட்டது ஆகையினாலே அதுமுதற்கொணடு கீழபபட்டுபபகுதி கட்டுகிற ஒரு ராசாவாயிருநதான இந்தச் சஙகதிகளெல்லாம (௰) சகத்துக கடைசியில நடந்ததாகக் கொஙகுதேசச் சரித்திரத்திலெழுதியிருககினறது மேறபடி பததாஞ சதகமானது அரிவீரனுடைய காலத்தைக் குறித்துப் பரமபரைககதைகளுககுச் சரிநேரக்குறையக கூடுமானமட்டும ஒத்திருககினறது மதுரை எரிநதுபோனதைக் குறிதது மேறசொனன பரமபரையையும அதைப பிடித்துக கொணடாரகளெனகிறதாயக் கொஙகுதேசத்துச் சரித்திரத்திலெழுதியிருககிற பிரஸதாபத்தையும ஒன்றுகச் சோததுச சொனனாலும் இநத இரணடு விதமான பிரஸதாபஙகளும ஒரே காரியமாகவிருக்குமெனறு அனுமானித்தாலும மிகவும் நியாயமாயிருககலாம இலலாவிட்டாலமதுரை நகரைப பிடித்துககொணடதும பாதி அழித்துபபோடப்பட்டதும (௰௧ம)சதகத்து ஆரமபத்திலே அனனிய தேசத்தாருடைய கலகததினாலே அநதச சமஸதானஞ் சில காலநதானமாறுயிருந்ததெனகிறது நியாயமாயிருககலாம.

[இனனும வரும]

Life of Mohammed —மகமதுவின் சரித்திரம்

௰௨ அதிகாரம்.

The Prophet now raised to a high pitch of dignity—Builds a mosque —A change in the tone of his revelations —The faithful now commanded to fight for the true religion

மகமது நாடோடியாயத் திரிநதும ஏகாதிபதியானா எபபடியெனில, மககத்திற் சேர்நதவுடனே தன மகள் பாத்திமா எனபவளை அலியெனபவருககு விவாகமபணணிக்கொடுத்த பிறகு, தான் இருககுமபடி ஒரு வீட்டையும அதற்குக கிட்ட ஒரு பளளிவாசலையும கட்டித் தேவாராதனை செயயவும பிரசஙகமபணணவும ஆரமபித்துத் தனது நாளுககுத் தளகத்தனும, தனது சனததுககதிபதியும, தனது மநதைககு மேயபபனுமானா. இவவளவும் அவா சனஙகளைத் தனது நாமதத்துககுட்படுததுமபடி யாதொரு விலலஙகமுமிடுககமுஞ் செயயாமல அவாகளைப பினனெனறுமனறுடிப புததிசாதுரியமாய அவாகளுடன பேசியவாகளைத் தனது மதாநுசாரிகளாககினார் அத்தைக குறித்த வாக்கியஙகளாவன "உன சனத்தை எசசரியுமஏனெனறால, நீா பிரசஙகியாயிருக்கிறீா நீா சனததுககு மேலாகத தத்துவத்தைச செலுத்துமபடி உமககதிகாரமளிககவிலலை"

மகமது பரதேசியாய் ஓடிமளவும் தனது மதத்தை அநுசரிக்குமபடி யாதொருவரைப் பலவநதபபடுத்தவுமிலலை, அலலவெனறு பரிசுத்த விசுவாசத்தின கோட்பாட்டை நிலைநிறுத்துமபடி ஒருவரை இடுககணடையபபணணவுமிலலை மககததிற பயிரஙகமபணணபபட்ட கோறானில அநேக இடஙகளிற கூறியிருககிறதென்னவெனில, 'பிரசஙகமபணணுவதே எனனுடைய நியமம எனது மததததை அநுசரிககுமபடி பலவநதப்படுத்துகிறதற்கு எனககு ததரவில்லை. சனம விசுவாசித்தாலெனன, விசுவாசியாதிருந்தாலெனன எனககு அககறையிலலை அவைபெலலாம பராபரனுககேயுடையது" என்று சொனனா இனனுஞ் சொலலுகிறதாவது "ஆபிரகாமுடைய மததததைப பினபற்றுமெனறு அசரீரி வாாத்தையிலல உமமுடன பேசினோம ஞானத்தினுஞ் சாநத புத்திபோதரவினுஞ் சனஙகளை ஆணடவனிடத்துககழைபபியும சயவுதாட்சணையுடன அவாகளுடன தருககமபணணும ஏனெனறால, உமது ஆணடவன தமது வழியை விட்டு விலகிப்போகிறவனையுஞ் சரிவரப போகிறவனையும அறிவாா பொறுதியுடன இசகட்டைச சகியும பராபரனும உமககொத்தாசை செயதாலொழிய நீா பொறுதியடைநதிருககிறது தெணடிபபு அவிசுவாசிகள் நிமித்தமாக மனககுறைபடாதேயும. மாாககக காரியஙகளில யாதொருவரைப் பலவநதப்படுத்தத்தேவையிலலை காரியமிபபடியிருககையால, உஙகளுககு யாதொரு இடையூறிடைஞ்சல வநதால அத்தை வருவித்தவாகளுடன எதிாககிறதைப பாாககிலும தஙகட்டஙகள் செனமதத்தை விட்டகலவது உத்தமமெனறு மகமது சொனனா இபபடி அவர் சொலலிவந்ததேதினாலெனில, அவருடைய சத்துருககள தலைபபட்டுத் தலையெடுத்ததினாலும அவருடைய தத்துவங குறைசசலினாலும இபபடிச சொனனதேயலலாமல மறறுமபடியலலவெனறு பாணிககவேணடியிருககிறது ஏனெனறால பனனிரணடாம வருடத்திலே மகக நகரியிற சிலபல கத்தராளிகள அவருடைய மததததுககு அநுசாரிகளானதினாற் போாததொழில புரியும ஆயுதஙகளினாலே தஙகளைக காத்துககொள்ளுமபடி ஆணடவன தஙகளுக்கு உத்தரமளித்தாரெனறு மாாசமபணணினவேளையில அவருடைய நாணகளும அதிகமதிகமாயப பலுகிப பெருகினவுடனே தன சத்துருககளுடன போா பொரவும, எமனதானனிடாமதாலும விககிரக வணககததை வேரோட்ட பிடுஙகவும, பட்ட

திஞற் சத்திய விசுவாசத்தை ஸ்திரப்படுத்தவும் ஆண்டவராற் தனக்குக் கட்டளை கிடைத்ததென்று சொன்னார். எப்படியெனில், அவிசுவாசிகளுடன் யுத்தஞ்செய்யவேண்டுமென்ற கட்டளையிருக்கின்றது. ஆகையாற் சாத்தானுடைய சிநேகிதர்களுடன் யுத்தஞ்செய்யும் ஏனென்றால் பசாசின் தந்திரமுறுதியற்றது. ஆ சத்திய விசுவாசிகளே! நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு விரோதமாயச் செய்யவேண்டியவைகளைச் செய்யுங்கள் யுத்தஞ்செய்கிறதற்குப் பவுஞ்சு பவுஞ்சாகப் பிரிந்து போகிலும்போங்கள் அல்லவென்று பிரிந்து பிரிந்து போகிலும் போங்கள். நீங்கள் யுத்தஞ் செய்யக் கட்டளையில்லாத மாசங்கள் வருமுன்னமே விக்கிரககாரரை எங்கே கண்டாலும் அவர்களைப் பிடித்துச் சிரத்தை எடுப்பதும் அல்லாமல் மறியற்காரராகவும்பிடித்தடைத்து அவர்கள் வீட்டைமுற்றிக்கைபோட்டு வசதிகண்டவிடங்களிலெல்லாம் பதிவிருங்கள். நீங்கள் அவிசுவாசிகளை அகப்படுத்தும்பொழுது சகலரையுங் கொல்வதுமல்லாமற் சிலரைக் கயிற்றினாற் கட்டிப் பிறகு ஓடித்தப்ப விடுகிலும்விடுங்கள். அல்லது பணம் வாங்கிக்கொண்டு விடுங்கள். மெய்யாகவே பராபரன் சத்திய விசுவாசிகளிடத்திலிருந்து அவர்களுடைய ஆத்துமாக்களை விலைக்கு வாங்கி அவர்கள் பராபரனிமித்தம் யுத்தஞ்செய்தார்களேயானாற் பரதீசின் அநுபோகத்தை அவர்களுக்குப் பராபரனளிப்பார்.

இன்னுஞ் சொல்லப்படுவதேதெனில், "நீர் இது காரியத்தைப் பற்றி அவர்களுடன் தருக்கந் தொடுக்கவேண்டாம். அவர்களை உமதாண்டவனிடம் அழைப்பியும்" என்னென்றால், நீரே உண்மையான வழியைக் கண்டுபிடித்திருக்கிறீர். அவர்கள் உம்முடன் தருக்கம் விளைக்க வந்தால் நீங்கள் ஏது செய்யவேண்டுமென்பதை ஆண்டவரறிவார். உங்களுக்குள்ளே ஒவ்வாதிருக்கிற காரியங்களைக் குறித்து மரித்தோர் எழும்புதலினாளிலே அதையாண்டவன் தீர்ப்பார்.

(On Hinduism)

இந்துமதம்

எக்காலத்திலுமுள்ள எச்சாதியாரிடத்துங் கடவுளைப் பற்றியுந் தங்கள் பாவ நிலையைப் பற்றியுஞ் சிலசில கருத்துக்கள் உண்டாயிருந்ததினால் அவர்களுட் சிலர் கடவுளை ஒருவழியாயு மற்றுஞ் சிலர் வேறோர்வழியாயும் வணங்கிவர நேர்ந்தது. தத்தமனப்படி அவரை வழிபடுதற் கேதுவுமாயிற்று. சரித்திரங்களின்படி நோவாவின் புத்திரனான சேமின் சந்ததியார் அல்லது சிலர் சொல்லுகிறபடி வேறொரு சந்ததியார் முதன்முதல் இந்துதேயத்திலே பூர்வீகத்திற் குடியேறினார்கள். ஆதலால் இந்துக்கள் புராதன செய்திகளைக் கன்னபரம்பரையாய்க் கேட்டறிந்திருப்பார்களே. பூருவ இந்துக்களின் மதம் யாதென்றும் இக்காலத்திலுள்ள மதத்திற்கு மூலமேதென்றும் வரையறைபடுத்தக் கூடாதிருந்தும், அவர்களுடைய வேதமதாநுசாரங்களைப் பார்க்குமிடத்துச் சாமானியசுரூபமதமாயிருக்கவேண்டுமேபோலே, ஆனாலும் பிறகாலத்திற் றீங்குதலைக்கொண்டதினால் அவர்கள் கடவுளை விட்டு விலகி அவருக்கு விரோதிகளானார்கள். இந்துமதவேதங்கள் பிரமாவின் வாயிலிருந்து பிறந்ததென்றும், அவைகள் அழிந்துபோன பின்னொரு காலத்திலே பிரமாவின் புத்திரன் திரும்பவும் பிறப்பித்தானென்றும், இந்துக்கள் சொல்லுகிறார்கள். ஆனாலும் அவைகள் பலகாலத்தும் பலராலுமெழுதப்பட்டனவென்பதற்கு அநேக தற்சாட்சிகளுண்டு. அவ்வேதங்களை இந்துக்களின் கணக்குப்படி (ருகும) வருடத்துக்கு முன்னே பரதவகுலத்தானாகிய வியாசரென்பவர் திரட்டிச் சேர்த்தார். அவைகளிலே கடவுளொருவரைப்பற்றியே பிரதானமாய்க் கூறியிருந்தும் பிறதேவர்களையும் பற்றிக் கூறியிருந்ததினாற் சனங்கள் மெய்க்கடவுளை விட்டுவிலகித் தீங்கிலே தலைப்பட்டார்களென விளங்குகின்றது. புராணங்களிற் சொல்லிய பிரமா, விட்டுணு, சிவன் என்பவர்கள் அநாதிகடவுளாற் சிருட்டிக்கப்பட்டுச் சகத்திலே படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலையு மியற்றி வருகிறார்கள். இவர்களைப் பற்றி வேதங்களிலே பிரதானகாரியமாய் எடுத்துப் பேசப்பட்டிருக்கவில்லை. சுருபவணக்கம் எக்காலத்துற் றோன்றியதென்று விளங்காதிருந்தும் அது தொடங்கின காலத்திலே சனங்கள் சிலரை வழிபட்டு வந்தார்களென்று தோன்றுகின்றது. பிற்காலத்திலே, இராமாநுசர் என்பவரெழும்பிச் சைவசிரோமணியான சங்கராசாரியருடன் வாதாடி வைணவமதத்தைப் பலப்படுத்தி அநேக நூல்களை எழுதித் திடப்படுத்தினார். அவர் காலந்தொடுத்து இற்றைவரைக்கும் மிகுதியானவர்கள் விட்டுணுபத்தி சகாரராய் அவரை வழிப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்குள்ளே சடங்குப் பிரமாணங்களைப் பற்றி அநேக உட்பிரிவுகளுண்டு. இவைகளைத் தவிர வேதாந்திகள், சருவகிகள் என்பவர்களுமுண்டு. அவர்களுள் வேதாந்திகள் கடவுளைப் பலபல ரூபாந்தரங்களாலும் வணங்குஞ் சிராத்தமுதலிய கிரியாங்க நெறிகளையும் பார்த்து வருகிறார்கள். சருவகிகள் அவைகள் யாவையும்விட்டு வேதாந்திகளையு மிழிவாய்ப் பேசி வேதங்களையுமிகழ்ந்து தள்ளுகிறார்கள். புராணங்களிற் சொல்லப்பட்ட சிவன், பிரமா, கிருட்டினன் முதலிய தேவர்களின் லட்சணத்தைப் பார்க்கும்போது அவர்கள் உலகத்திருந்த மனிதருக்குள்ளே வெற்றிவீரஞ் சிறந்தவர்களென்றும், தங்கள் சாதியார் இராசநெட்டூர நெருக்கிடைப்பட்டபோது அவர்களைத் தங்கள் சௌவுரியத்தாலாதரித்துக் காத்தவர்களென்றும், இதினிமித்தந் தேவர்களாய் வணங்கப்பட்டு வந்தவர்களென்றும், வெளிப்படையாயத் தோன்றுகின்றது. இக்காலத்துள்ள இந்துக்கள் வேதநெறிகளுக்குச் சிலகாரியங்களிலே தப்பிநடந்து, நோன்பு, நிரத்தம், பலி, சாந்தி, சடங்கு முதலியவைகளை முயற்சியுடனே நடத்திவருகிறார்கள். இவர்களுக்குள்ளே படித்தவர்கள் வேதங்களிலொழுங்கையும், ஒழிந்தவர்களுலக நெறி பழக்கங்களையும் பின்பற்றிக்கொண்டு தங்களாத்தும நிலையாதெனச் சற்றேனுஞ் சிந்திக்கப் பாராமல் அறியாமையில் நடந்து சீவியம்விடுகிறார்கள். இவர்கள் வீண்பத்தியிலமிழ்ந்தி அலகையின் மாயதந்திர வலையில் மயங்கி அதனவழியையே விரும்பி அறிவிற்றேற்றமின்றி அழிந்துபோகிறார்களேயென்று நாம் நாடோறுங் காண்கிறோமே. அலகையானது இவர்களிற் குடிகொண்டு பாவமே நின்போசனமாகிப் பாவப்பயிரசியே ஆனந்தமுமகிமையுமாகி நரகமும் நித்திய வீடாய்விட்டதே. இவர்கள் தங்கள் வேதசாஸ்திரங்களைப்பற்றி எவ்வளவு பாராட்டினாலும், அவர்களிலே சன்மார்க்க நெறியும் பாவத்திற்கஞ்சுங் குணமும் மெய்க்கடவுள் வணக்கமுமில்லையே. நான் பிள்ளைகளைத் தாபரித்து வளர்க்க அவர்கள் என்னைவிட்டு மருளவிழுந்தார்கள். மாடு தன் எசமானையுங் கழுதை தன் முன்னணையையுமறியும் ஆயினும் என் சனமோ என்னை மதிக்கிறார்களில்லை என்ற வேதவசனத்தின்படி இந்துக்களிடத்திற் கண்டாயிற்றே. ஆதலால் அறுப்புக்காலத்தெசமான் ஆத்துமாக்களைக் கூட்டுகிறதற்கு வேலையாட்களை எழுப்புமபடி ஞானக்கிறிஸ்தவர்கள் கடவுளைப் பிராத்திப்பார்களாக. கடவுளுந் தமது திருவாக்கின்படி அனுகூலப்படுத்துவாராக. *(Translated from the Native Herald)*

புவனசாத்திரமும் அதனை விளக்கும் படவிபரங்களும்.

(Outlines of Geography)

ஆசியாத்தேச விபரம்

க பெருந் தேசப்பகுதிகள் ஆறினும் ஆசியாவே மிகவும் விஸ்தாரமுள்ளதும் அநேக சனங்களை அடக்கியதுமாயிருக்கின்றது. ஆசியாவென்னும்பேர் லீதியாவிலுள்ள (Lydia) ஓர் குறிச்சிக்கு முதன் முதல் ஓமர் (Homer) முதலிய வித்துவான்களாற் சொல்லப்பட்டுப் பின்பு சின்னாசியாவுக்கும் இன்னும் பிறகிட்ட காலங்களில் முழு ஆசியாத் தேசத்திற்குஞ் சொல்லப்பட்டதேயன்றி அச்சொல் பிறப்பதற்கு உண்மையான ஓர் மூலத்தையறியோம். பூர்வீக சரித்திரங்களிற் சொல்லப்பட்ட நதிகளும் மலைகளும் இதிலிருக்கின்றன அதுவுமன்றி ஆசியா மிகுந்த பொன், வெள்ளி, இரும்பு, இரத்தினங்களும் பிரையோசனமான பலவகை விருக்கங்களும் விலங்குசாதிகளுமுள்ளது. அதிலே பராபரன் முதன்மையான மனிதரைச் சிருட்டித்தார். அதிலிருந்து மனிதர்கள் பெருகிப் பூமியெங்கும் பரவிப்போய்க் குடியேறினார்கள். அதிலே உலகரட்சகராகிய கிறிஸ்துநாதர் மனிதவதாரம்பண்ணி மரித்தார். அவருடைய சுவிசேஷம் அதிலிருந்து பூமியெங்கும் பிரபலியமாயிற்று. சத்

உதயதாரகையைப்பிரசுரஞ்செய்யுமுகாமையோருக்கு மிகுதியும் நன்மையுண்டாக வாழ்த்துகிறேன்.

சிறிது நாட்களுக்கு முன்னமே என்னுடைய கையில் அகப்பட்ட குருட்டுவழி என்னும் ஒரு சிறு புத்தகத்தை நான் வாசித்த பொழுது, உம் புத்தகம் எம. காரியமாகிய பிராமணப்பிரசங்கத்துக்கு, கூஉம் பக்கத்திலும் உதாரணமாகக் காட்டிய அகஸ்தியர் ஞானம் அம் செய்யுட்கள் எட்டிரண்டுமறியாத முகட்டினருனே என்று காட்டியிருப்பது என்னுடைய அற்பவறிவுக்கு விளங்காததனையால் உதயதாரகைவழியாயினும் கலவியிற்சிறந்த புலவர்களாகிய உங்கள் வழியாய் யாரும் எளிதிலறியும்படி ஓர் விடைகற்பிக்கும்படி கேட்கிறேன். இப்படிக்கு

௲அ௱சஉ௵ ஆனி மீ. உ தி௳ உடுவை நகர்,
சுப்பிரமணியர் குருநாதபிள்ளை.

உதயதாரகையின் எடிட்டர்களுக்கு நமஸ்காரம்.

ஐயாவே,

இதினடியில் நாங்கள் எழுதுகிறசில காரியங்களைத் தாங்கள் தங்கள் மேன்மையான பத்திரிகையில் பிரசித்தஞ்செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம் அதென்னவென்றால்

கொழும்பிலிற்றைக்குச் சில மாஸத்தைக்குமுன்னிதாக சிமான் காசிச்செட்டித்துரை பிரசித்தம்பண்ணப்பட்ட உதய ஆதித்தனென்னும் பத்திரிகை, சோப்ஸ்கிறைபர்மாருக்கு முறைமைபோல மாதாந்தம் முதற்திகதி அல்லது இரண்டாம் மூன்றுந்திகதியிற்குள்ளாகக்கிடைக்குமென்று சோப்ஸ்கிறைபண்ணினவிடத்தில் அதுபோல இரண்டு மூன்று மாதம் கிடைத்துப் பிறகு ஐந்தாம் ஆறுந் திகதியிற கிடைக்கிறதுமரிதாயிருக்குது, இதல்லாமல் மேற்சொல்லப்பட்ட பத்திரிகைக்கு சோப்ஸ்கிறைப்பண்ணின போகளுக்கு முறைமைபோல ஒவ்வொரு குவாட்டருக்கும் வில அனுப்பாதபடிக்கு, மாதாந்தம் பத்திரிகைகளை அனுப்பி உடனேதானே பணத்தையறவிட்டுக்கொள்ளுகிறார்கள்

மேலும் தாங்கள் தங்கள் பத்திரிகையாகிய உதயதாரகையை இவடத்துக்கனுப்பி முறைமைபோல ஒவ்வொரு குவாட்டருக்கும் வில்லையனுப்பி எங்களிடம் பணமறவாக்கிறபடியால நாங்கள் மிகவுஞ் சந்தோஷத்துடனே கொடுக்கிறதற்கு ஆயித்தமாயிருக்கிறோம் ஆனாலுந் தாங்கள் பிரதேசத்தாராயிருந்துமிவ்விடத்திலிருக்கிற எங்களைநம்பித்தாங்கள் தங்கள் பத்திரிகைகளை அனுப்புகிறபடியால், தங்களுக்கு மிகுந்தயுபகாரஞ்சொல்லுகிறோம், ஆனாலிவ்விடத்திலிருக்கிற பத்திரிகையின் எடிட்டரவர்கள் எங்கள் தேசத்தாராயிருந்தும் எங்களிடம் ஒரு முறைமைப்பால பணமறவிடாததால நாங்கள் மிகவுந் துக்கப்படுகிறோம் இப்படிக்கு,

கொழும்பு } தங்களூழியக்காரர்
பங்குனி மீ எ தி௳ } சோப்ஸ்கிறைபர்

அறிவித்தல்

மகா கனம்பொருந்திய பைனாத்துரையவர்களே,

செல்வக்கனமுங் கலவித்தனமும் ஆன்றோர் மனமுஞ் சான்றோரினமும் பொருந்திய ம ஸ்ரீ ஸ்ரீ முகாமைக்காரரவர்களை ஓர் வேதவாக்கியங் கலந்தனுப்பக் கேட்டுக்கொண்டோம் அவர்களனுப்பிற செய்தனுப்பும்வாமென்று விண்டோம். வேலாயுதர் வைத்திலிங்கரனுப்பியதையே கண்டோம் கண்டதையுமுண்டோம் அவர் அவதானச்சாரத்தை யெண்ணுவேன் அத்தறுபகாரத்தைப் பண்ணுவேன் என்றதால் தாங் கேட்பது முறைமையல்லவென்றெண்ணினோம். அதினுபகாரவாக்குத்தத்தமும் பண்ணினோம். இம்மதயுண்மை இவ்வாறியற்றவதவர்க்கேவண்மை ஆதலால் அவர் பொக்கிஷந் திறந்தென்னவெடுப்பார்? அட்சரமொன்றிற்கென்ன கொடுப்பார்? கொடுப்பதைத் தங்களிடங் கொட்டட்டும் கொட்டிய பொதுவிற் கட்டட்டும் கட்டியபின் அவர் கவியைத் தங்களிடத்தில் வைக்கட்டும் வைத்ததிறகிணங்கவெங்கள் அவதானமெய்க்கட்டும் அக்கவியையுங் கலந்தனுப்பியதையும், யாழ்ப்பாணத்திலும் மற்றுந் தேசங்களிலுஞ் சூரியப்பிரகாசம் போற் புகழ்பெற்றோங்கிய மகா கனந்தாங்கிய, ம. ஸ்ரீ, ஸ்ரீ விசுவநாதசாஸ்திரியாரவர்கள், நவாலி கார்த்திகேயுடையார் தம்பையாப்பிள்ளையவர்கள், வட்டுக்கோட்டை கார்த்திகேசையர் இன்னியர் என்பவர்களிடத்தனுப்பட்டும் அவர்கள் கலந்து கவிக்குச் சரியெனப்பத்திரிகையிற் காட்டட்டும் கவியிலும் பிழையில்லையென்று கையொப்ப நாட்டட்டும். பிழையிருந்தாலும் பிழையென்றே தீட்டட்டும். அதன்பின்பு வதானமவர் பார்க்கட்டும் பார்த்தவரையர் தீர்க்கட்டும்.

௲அ௱சஉ௵ வைகாசி மீ உ௩ தி௳ இப்படிக்கு,
மதுரை சோடசாவதானப்புலவர்.

எழுதாவெழுத்துப் பிழையைவிலக்கல்

தாரகை உ புத் ௬ சஞ்சிகையில் "வெங்கடாசலையர் கார்த்திகேசையன்" என்றிருக்கின்றது. அது "வெங்கடாசலையர்" என்றிருக்கவேண்டியது இதைக் கார்த்திகேசையர் அவர்கள் தானே பிழையாகவெழுதினார்களென்று நினைக்கக்கூடாது அச்சுப் பிழையென்றே நினைக்கவேண்டியது. பத்திராதிபதி

உதயதாரகையின் முகாமைத்துரை அவர்களுக்கு வந்தனம்.

நால் மவருணத்தவரென்றுஞ் சூத்திரரென்றுஞ் சொல்லப்படுபவர்கள், வெள்ளாளரென்று சிலர் சொல்லவும், வேறுசிலரிவரல்லரென்று [illegible]மையை உங்கள் உதயதாரகையென்னும் மேலான பத்திரிகையின்வழியாய் அறிவித்தருள்செய்யும்படி பிரார்த்திக்கிறேன். இப்படிக்கு

யாழ்ப்பாணம் } சந்தேகநிவாரணப்பிரியன்
சுண்டிக்குழிக்குச் சேர்ந்தகரையூர் } கார்த்தி கதிரித்தம்பி

காகிதப் பிரத்தியுத்தரம்
[Answers to Correspondents]

அளவையம்பதி "ஆகமசலா நிபுணர் சுப்பிரமணியத்தம்பிரான்" அவர்கள் வரவிடுத்த செய்யுட்கள் அவர்கள் கருதியபடி இடைக்கணத்தருக்கத்தை யொழித்ததற்கு மாறாக அகிலேறப்பட்ட சில யாழ்ப்பாணத்தாரைச் சினக்கச் செய்யுமென்றுணர்ந்து பயிரங்கஞ்செய்யாமல் விடுகிறோம்.

"பூரணசந்திரன்" என்னும் புதுப்பத்திரிகை பிரசுரமாமென்பதைப்பற்றிப் "பலசனபட்சலுகிய ஓராமானுக்கள்" எழுதிய கடிதத்தை அப்பத்திரிகைக் கதிகாரிகள் அதைப்பற்றிய வரலாற்றுவிஸ்தாரத்தைப் பிரசித்தம்பண்ணுந்தற்காலத்திலே வெளிவிடுவோம்.

கொழும்பு "மத்தேயு மெய்க்கும் பெருமாப்பிள்ளை" என்பவர் சொல்லிய விதமாய்ப் பெயர்கள் சத்தியவேதபுத்தகத்தில் நாங்கள் ஒன்றுங் காணாததால் அவர் பிழையாக மொழிபெயர்த்த சத்திய வேதத்தை வைத்திருக்கிறார்போலும் ஆதலால் அவர் பிழையற்ற புத்தகத்தைத் தேடிக்கொள்வதுத்தமம்

To Correspondents —Certain "Lovers of justice ' inquire if we have any objection to "call the Natives who are rich and learned" by the appellation of 'Mr " We answer, No, and further, if it would please any one, and be no wise injurious to his feelings or the feelings of others, we should have no objection to add "Esq " or "your Honour," or any other appellation or title to his name We suppose however that in Tamil Society civility requires no other appellation than "Pullay" to a man's name unless it be when addressing an aged man, when "Appa" or Father is often used We wish both our native and burgher friends would seek distinction and honour by improving their intellectual and moral characters, and thus gaining the respect and confidence of their superiors in station, rather than by coveting empty titles "A good name is rather to be chosen than riches," the wise man says, and the poet also adds

"Honour and worth from low condition rise,
Act well your part, there all the honour lies "

Some of our "humble servants round about Jaffna Fort" beg that their grievances may be made public They state that the Sepoys appointed to guard the Esplanade and keep off cattle, &c sometimes entice cattle by putting branches of trees and green leaves before them, to trespass on the ground, and then they straightway impound them They also state that liberty is given to some persons to have their cattle graze on the Esplanade while it is denied to others, and this is considered a piece of injustice With regard to the first point, if the fact were established by proper evidence, we doubt whether the fine for trespass could be collected, and as to the second we do not know what regulations are made for the protection of the Esplanade and can give no opinion with regard to the justice or injustice of the complaint

பஞ்ச தந்திரக் கதை

சுகிர்லாப தந்திரம், அல்லது நட்புப்பேறு

(௱௩௬ பக்கத்தினின்று)

பூனை இவைகளைத் தின்கிறது மேலுங் கொலைசெய்கிறதென்று நினைத்து இப்படிச்சொன்னேனென்ன, அதைக்கேட்டு நெடுஞ்செவியன் பூமியைத்தொட்டுச் சிவசிவவென்றுச்சரித்துக் காதிலே கையைவைத்துச் சொல்லுகிறது. நான் தருமசாத்திரங்களைக் கேட்டு மிகுந்த வைராக்கியமடைந்து பொல்லாத கருமங்களையெல்லாம் விட்டுவிட்டேன் ஏனென்றால் அநேகசாத்திரங்களிற்கொலை செய்வதுபோல வேறொரு பாதகமுமில்லையென்று சொல்லியிருக்கின்றது ஏனென்றால் எவர்கள் மற்றொருவரைக்கொன்று தங்களுக்குச் சுகத்தை விரும்புகிறார்களோ அவர்கள் நரகத்தையடைவார்கள் ஆகையாற் கொலைசெய்யாமலிருப்பது போல வேறொரு தருமமுமில்லையென்று நினைத்துக் காட்டிலிருந்துகொண்டு காய்கனிகிழங்குகளைச் சாப்பிடுகிறவர்கள் பாதகமெப்படிப்பண்ணுவார்களென்று சொல்லிக் கழுகுக்கு நம்பிக்கைவரப்பண்ணி அதனை வீட்டிலிருந்து, பிறகு அந்தருத்திராட்சப்பூனை பட்சிகளின் குஞ்சுகளை நாடோறுமங்கே கொண்டுவந்து தின்றுகொண்டிருக்கத்தலைப்பட்டது அப்பொழுது குஞ்சிழந்த பறவைகளெல்லாங் கிலேசப்பட்டுப் பிறகெல்லாமொன்றாய்க்கூடித் தங்கள் குஞ்சுகளைச் சோதிக்கத் தொடங்கின பூனை இதையறிந்தவுடனே விட்டோடிப் போயிற்று பின்பு அந்தப் பட்சிகளங்கே பார்த்துக்கொண்டே கழுகின் பொந்தண்டை வந்துபார்க்கையில் அந்தக் குஞ்சுகளுடைய வெள்ளெலும்புகளும் இறகுகளும் விழுந்து கிடக்கக்கண்டு நம்முடைய குஞ்சுகளை இந்தத் துட்டனாகிய கழுகு பட்சித்ததென்று நிச்சயித்துப் பிறகு அந்தக் கழுகைக் கொன்றன ஆகையால் ஒருவனுடைய குணந்தெரியாமல் அவனுக்கிடங் கொடுக்கலாகாதென, அப்போது நரி சொல்லுகிறது உன் சுபாவமிவனுக்குச் சிநேகிக்கிறதற்கு முன்னே தெரியுமா? ஆகையால் நல்லோர்களுக்குச் சுபாவத்தினாலே காரியமில்லை அவர்களுடைய சிநேகங் கண்டமாத்திரத்தினாலேயே யாகிறதென, மான் அதைக்கேட்டப்படி நீயெனக்கு மித்திரனே அப்படியே இவனுக்குமிருக்கட்டும் நீ ஒன்றுந் தடைசொல்லாதேயென்று சொல்லி நரியைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டது பிறகு மூன்றுந் தங்கள் யாகத்தின்படி வயிறுநிரம்பக்கொண்டு இராத்திரிக்கந்தவிடத்தில் வந்து கொண்டிருந்தன. இப்படியிருக்கையில் ஒருநாள் நரி மானைப்பார்த்து—மித்திரா இந்தக் காட்டில் விளைவில் நேர்த்தியான பயிரிருக்கின்றது அதை உனக்குக் காண்பிக்கிறேனென்று சொல்லி அழைத்துக்கொண்டு போய்க்காட்டிற்று அன்றுமுதலாய் அந்த மான் போய்த் தினந்தினம் பயிரைமேய்ந்து கொண்டிருக்கையில் அதைக் கொல்லைக்காரன் பார்த்தங்கே கண்ணிவைத்தான் பின்பு மானங்கே வழக்கப்படி மேயப்போய் அதிற் சிக்கிக்கொண்டிப்போதென்னை மித்திரனைத்தவிர யார் விடுவிப்பாரென்று மனதிலெண்ணிக்கொண்டிருக்கையில் அங்கே நரிவந்து தன்னுடைய மனோரதம் நிறைவேறிற்று இப்போது நானிதனெலும்பையும் மாமிசத்தையும் நிரம்பத் தின்பேனென்று வாயூறி மனதிலெண்ணிக்கொண்டு சும்மாவிருந்தது. அதைக்கண்டு மான் சொல்லுகிறது.

(இன்னும்வரும்)

௪ம் அதிகாரம்

அறன்வலியுறுத்தல்—*The power of Virtue*

௩௧. சிறப்பீனுஞ் செல்வமுமீனுமறத்தினூஉங்
காக்கமெவனோவுயிர்க்கு.

பு. மோட்சத்தையுங் கொடுக்கும் சுவர்க்கபதவிமுதலாகிய செல்வத்தையுங் கொடுக்கும் ஆதலால் உயிர்களுக்குத் தருமத்தைக்காட்டிலும் மிகுந்த ஆக்கத்தைத் தருவது யாது.

Virtue will confer heaven and wealth, what greater source of happiness can man possess? *Drew.*

What more doth profit man than virtue doth,
By which felicity is given and whence
Eternal bliss ensues? *Ellis.*

---

௩௨. அறத்தினூஉங்காக்கமுமில்லையதனை
மறத்தலினூஉங்கில்லைகேடு.

பு. ஒருவனுக்குச் செய்யப்படுந்தருமத்தில் மேற்பட்ட நன்மைதருவதாகிய உயர்வுமில்லை அதை மயக்கத்தினாலே மறந்துவருகிறதின் மேற்பட்டதீமை தருவதாகிய கெடுதலுமில்லை

There can be no greater source of good than (the practice of) virtue, than the forgetfulness of it, there can be no greater source of evil *Drew*

No greater gain than virtue canst thou know
Than virtue *to forget* no greater loss *Ellis*

---

௩௩. ஒல்லும்வகையானறவினையோவாதே
செல்லும்வாயெல்லாஞ்செயல்.

பு. தங்கள் தங்களுக்கு இயலுமாத்திரத்தால் தருமமாகிய நல்வினையை ஒழியாமலே இடைவிடாமலே அது வந்து அடையப்படும் எல்லாவிடங்களாலுஞ் செய்க.

As much as possible, in every way, incessantly practise virtue *Drew*

Definitions of the words expressive of the actions of the mind, published in the last No

Think	நினைத்தல்	Understand	புலப்படுத்தல்
Suppose	நினைத்தல், நம்புதல்	Apprehend	கிரகித்தல் மட்டுக்கட்டுதல்
Imagine	எண்ணுதல்		
Believe	உறுதிசாதித்தல்	Conjecture	உத்தேசித்தல்
Deem	நிதானித்தல், தீர்த்தல்	Guess	ஐயித்தல், பாவணித்தல்
Reflect	உற்றுப்பார்த்தல்	Divine	மட்டிடுதல்
Ponder	சீர்தூக்கிப் பார்த்தல்	Surmise	நினைத்தல்
		Cogitate	உள்ளுதல், யோசித்தல்
Meditate	அழுந்திப்பார்த்தல்		
Muse	புலனையொடுக்கிநினைத்தல்	Entertain	கருத்துக்கொள்ளுதல்
Consider	உற்றுப்பார்த்தல்	Will	சித்தங்கொள்ளுதல்
Regard	கணித்தல்		
Fancy	மனத்திட்டம்பார்த்தல்	Wish	வாஞ்சைப்படுதல்
Contemplate	தியானித்துப்பார்த்தல்	Choose	தெரிந்தெடுத்தல், நாடுதல், ஆய்தல்
Conceive	மனோபாவித்தல், கருதுதல்	Prefer	உத்தமமென்றெண்ணல்
Comprehend	கிரகித்தல், மனதிலடக்குதல்		

பழமொழி.

அறச்செட்டு முழுநட்டம்
உரல்போய் மத்தளத்துக்கு முறையிட்டதுபோல
எண்ணிச்செய்பவன் செட்டி எண்ணாமற்செய்பவன் மட்டி
கடுகுசிறுத்துங் காரம்போகுமா?
கண்ணறுத்தவனுக்கு நாட்டுவளப்பமென்ன
குலத்தைக்கெடுத்தது கோடரிக்காம்பு
கனிவாய்ப் பகெட்டாப்போல